# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

மூன்றாம் காலாண்டு, 2020

## தேவனுக்கு நண்பர்களை உருவாக்குதல்:

### தேவதிட்டத்தில் பங்கேற்பதின் மகிழ்ச்சி


**1** ஏன் சாட்சி சொல்லவேண்டும்? (ஜூன் 27–ஜூலை 3) ........ **5**

**2** வெற்றிகரமான சாட்சிகள்: தனிநபர் சாட்சியின் வல்லமை (ஜூலை 4–10) ..... **14**

**3** இயேசுவின் கண்களால் மக்களைப் பார்த்தல் (ஜூலை 11–17) ........ **23**

**4** ஜெபவல்லமை: பிறருக்காகப் பரிந்துபேசுதல் (ஜூலை 18–24) ........ **32**

**5** ஆவியின் வல்லமைபெற்ற சாட்சி (ஜூலை 25–31) ........ **41**

**6** எண்ணிலடங்காச் சாத்தியங்கள் (ஆகஸ்ட் 1–7) ........ **50**

**7** வசனத்தைப் பகிர்ந்துகொள்ளுதல் (ஆகஸ்ட் 8–14) ........ **59**

**8** இயேசுவைப்போல ஊழியம்செய்தல் (ஆகஸ்ட் 15–21) ........ **68**

**9** ஆதாயப்படுத்தும் மனநிலையை உருவாக்குதல் (ஆகஸ்ட் 22–28) ........ **77**

**10** ஈடுபாடுகொள்ள ஓர் அற்புதமான வழி (ஆகஸ்ட் 29–செப் 4) ........ **86**

**11** இயேசுவின் வரலாற்றைப் பகிர்ந்துகொள்ளுதல் (செப் 5–11) ........ **95**

**12** பகிர்ந்துகொள்ளத் தகுதியான செய்தி (செப் 12–18) ........ **104**

**13** விசுவாசத்தில் ஒரு படி (செப் 19–25) ........ **113**



பாட ஆசிரியர்

**மார்க் ஃபின்லே**

தமிழாக்கம்

மார்சல் ஜசக்



**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

**செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை**

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர்,

**சென்னை – 600 048**

# தேவனுக்கு நண்பர்களை உருவாக்குதல்



பல ஆண்டுகளுக்கு முன்பு, ஊழியர் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டேன். ஊழியம்செய்வதுபற்றி கலந்துரையாடினோம். நண்பர் ஒருவர் இவ்வாறு சொன்னார்: "ஊழியப்பணி என்பது முதற்கண் தேவனுடைய வேலை. நமது உலகத்தைக் காப்பாற்றுவதற்கு பரலோகத்தின் அனைத்து வளங்களையும் அவர் பயன்படுத்துகிறார். காணாமல்போன மக்களை இரட்சிக்கும் பணியில் அவரோடு சந்தோஷமாக ஒத்துழைப்பதே நம் வேலை" என்றார். ஒரு பெரிய பாரம் என்னைவிட்டு அகன்றதுபோல இருந்தது. காணாமல்போன உலகத்தாரைத் தேடுவது என் வேலை அல்ல; அது தேவனுடைய வேலை. அவர் ஏற்கனவே செய்துவருகிற ஒரு பணியில் அவரோடு சேர்ந்து ஒத்துழைப்பதுதான் என்னுடைய கடமை.

ஊழியப்பணி தேவனுடைய வேலை என்பதை வேதாகமம் முழுவதும் சொல்கிறது. சாலொமோன் சொல்கிறார்: 'உலகத்தையும் (நித்தியத்தையும்) அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்.' பிரசங்கி 3:11. ஒரு நபர் இந்த உலகில் பிறந்ததுமே, அவருடைய மன அமைப்பின் அடிப்படையாக நித்தியத்திற்கான ஏக்கத்தை உள்ளத்திலே தேவன் வைக்கிறார். "ஆண்டவரே, நாங்கள் உமக்காகச் சிருஷ்டிக்கப்பட்டோம்; எங்கள் இருதயங்கள் உம்மில் இளைப்பாறுதலைக் காணும்வரையிலும் அவற்றுக்கு இளைப்பாறுதல் இல்லை" என்கிறார் அகஸ்டின். 'உலகத்தில் பிறந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளி இயேசு' என்று யோவான் 1:9 சொல்கிறது. தம்மிடம் நம்மை இழுப்பதற்கு பரிசுத்த ஆவியை தேவன் அனுப்புகிறார். நல்லதைச் செய்வதற்கான விருப்பத்தையும், பாவம்குறித்த உணர்வையும் உண்டாக்குகிறவர் பரிசுத்த ஆவியானவரே. அதை நாம் முற்றிலும் புரிந்துகொள்ளாமல் இருக்கலாம். ஆனால் நம்மை இயேசுவிடம் இழுப்பதற்கு ஆவியானவர் நம் வாழ்க்கையில் கிரியைசெய்கிறார். யோவான் 16:7-15.

பாவத்தால் மனிதர்களுடைய நிலை கேள்விக்குறியாகி, நித்தியமரணத் தீர்ப்புக்கு ஆளானபோது, அதிலிருந்து மீட்க, தேவ அன்புதான் முதலில் செயலில் இறங்கியது. லூக்கா இவ்வாறு எழுதுகிறார்: "இழந்துபோனதைத்

தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்.' லூக்கா 19:10. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" என்று ரோமர் 5:8 சொல்கிறது. நம் இரட்சிப்புக்காக தேவனே முதல் முயற்சி எடுத்தார். பரலோகத்தின் மகிமையையும் மாட்சிமையையும் விட்டு, நம்மை மீட்பதற்காக இந்தப் பாவ உலகத்திற்கு கிறிஸ்து வந்தார். அவரைநோக்கி நாம் தவழ ஆரம்பிக்கும்முன்னரே, அவர் நம்மிடம் துள்ளி ஓடிவந்தார்.

நாம் நம் வாழ்க்கையை அவரிடம் கொடுக்கும்முன்பே, தம் மரணத்தினால் நமக்கு இரட்சிப்பைப் பெற்றுத்தந்தார். நாம் அவருக்கு சத்துருக்களாக இருந்தோம்; அவரோ நம் நண்பராக இருந்தார். நாம் அவருக்கு நம் முதுகுகளைக் காட்டினோம்; அவரோ தம் முகத்தை நமக்குக் காட்டினார். நாம் அவரை அசட்டைபண்ணினோம்; அவரோ நம்மேல் மிகுந்த அக்கறைகாட்டினார்.

லூக்கா 15இல், காணாமல் போன ஓர் ஆட்டை விடாமல் தேடின நல்ல மேய்ப்பனாக, தன் சீதனமான வெள்ளிக்காசைத் தொலைத்து, அதை தீவிரமாகத் தேடின ஒரு பெண்ணாக, காணாமல்போய் திரும்பி வந்த தன் மகனைச் சந்திக்க ஓடின வயதான ஒரு தகப்பனாக அவர் சித்தரிக்கப்படுகிறார். 'உலகத்தோற்றத்திற்கு முன்னரே மீட்பின் திட்டம் போடப்பட்டது. மனிதனுக்குப்பதிலாக இயேசு மரிக்கும் இந்த அற்புதத் திட்டத்தில் இயேசு தனியாகச் செயல்படவில்லை. உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னரே, பரலோக ஆலோசனைக் கூட்டத்தில், தேவனுக்கு மனிதன் உண்மையற்றவனாக மாறினால் பிதாவுடன் ஒன்றாக உள்ள கிறிஸ்து அந்தக் குற்றத்தை ஏற்றுக்கொண்டு, அவனுடைய தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று பிதாவும் குமாரனும் உடன்படிக்கைசெய்தனர்.' *Advent Review and Sabbath Herald, November 15, 1898.*

**கிறிஸ்துவின் ஊழியப்பணியில் அவரோடு பங்கேற்று ஒத்துழைக்கிற அரிய சிலாக்கியமும், அற்புதக் கடமையும், நித்திய சந்தோஷமும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.**



**மார்க் ஃபின்லே அமெரிக்காவின் கனெக்டிகட் மாகாணத்தைச் சேர்ந்தவர். சர்வதேச சுவிசேஷகர். 2005-2010இல் செவந்த்-டே அட்வென் டிஸ்ட் ஜெனரல் கான் ஃபரன்ஸில் துணைத்தலைவராக இருந்தவர். முழுநேரப் பணியிலிருந்து ஓய்வு பெற்றபிறகு ஜெனரல் கான்ஃபரன்ஸ் தலைவரின் உதவியாளராகப் பொறுப்பேற்றார். போதகர் ஃபின்லேவுக்கும் அவருடைய மனைவி எர்னெஸ் டினுக்கும் மூன்று பிள்ளைகளும், ஐந்து பேரப் பிள்ளைகளும் இருக்கிறார்கள்.**

# மனன வசனங்கள்

1 நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். 1தீமோ 2:3,4.

2 நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே என்றார்கள். அப் 4:20.

3 என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். மத் 4:19.

4 நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. யாக் 5:16.

5 அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். அப் 4:31.

6 இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார். 1கொரி 12:11.

7 அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத்திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். ஏசாயா 55:11.

8 அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறடிக்கப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகினார். மத்தேயு 9:36.

9 கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். 1பேதுரு 3:15.

10 தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். மத் 9:37,38.

11 உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன். 1யோவான் 5:13.

12 அப்பொழுது மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின் மேல் நீட்டினார், பூமியின் விளைவு அறுப்புண்டது. பின்பு வேறொரு தூதனும் கருக்குள்ள அரிவாளைப் பிடித்துக்கொண்டு பரலோகத்திலுள்ள தேவாலயத் திலிருந்து புறப்பட்டுவந்தான். வெளி 14:16,17.

13 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். பிலி 2:5-7.